1972 நவம்பர் 14]

தொடர் எண்.	கோரிக்கை.	குறிப்புரை.
(1)		(3)
9.	மிக அற்பமான காரணங்களுக்காக இரண்டு காவலாட்கள் தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டனர், இதுகுறித்து இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.	கடமைகளைச் செய்யத் தவறிய கடுமையான காரணங்களுக்காக அவர்கள் பதவியிலிருந்து தாற்காலிகமாக நீக்கப்பட்டனர். இந்த வழக்குகளில் அவர்களை மஸ்தூர்களாகப் பதவி இறக்கி இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.
10.	பணிபுரியும் போது விபத்திற்குள்ளான பணியாளர்களுக்கு சம்பளத்துடன் விடுப்பு அல்லது இழப்பீட்டுத் தொகை அளிக்கப்படவில்லை.	பணி முறைப்படுத்தப்படாத பணியாளர்கள் விபத்துக்கள், அல்லது ஏனைய காரணங்களுக்காக பணிக்கு வராமலிருந்தால், அதற்காக, மருத்துவச் சான்றிதழ் அளிப்பதன் மேல் ஈட்டாத விடுப்புக்கு (unearned leave) தகுதியுடையவரல்லர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

[113-ம் பக்கத்தில் 312-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க)

அறங்காவலர் பணிபற்றிய விவர அறிக்கை

(1) 1959-ஆம் ஆண்டில் இந்து சமய—அறநிலையச் சட்டத்தின் கீழ் உள்ள பல அதிகாரிகள் விடுக்கும் சட்டபூர்வமான உத்தரவுகளுக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும் என அறங்காவலர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

(2) அறங்காவலர், கோயிலின் காரியங்களை நிர்வகிக்க வேண்டியவராவார். பொறுப்பு நிலையம் எற்படுத்திய திட்டங்களின்படியும், நிலையத்தின் வழக்கத்தின்படியும், தக்க அதிகாரியால் அளிக்கப்பெறும் சட்ட பூர்வமான உத்தரவுகளின்படியும் அதன் நிதியினையும் சொத்துக்களையும் உபயோகித்தல் வேண்டும்.

[1972 நவம்பர் 14

(3) அறங்காவலர் கோயிலின் சொத்துக்கள் முதலியவற்றைக் காட்டும் பதிவேடு ஒன்றினைத் தயாரித்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு ஆண்டிலும், மேற்சொன்ன, பதிவேட்டிற்குச் சேர்த்தல் நீக்கல் பற்றிய பட்டியலை அறங்காவலர் தயாரிக்கவேண்டும்.

(5) பத்தாண்டுக்கு ஒருமுறை புதிய பதிவேட்டினை தயாரித்து அறங்காவலர் அனுப்ப வேண்டும்.

(6) கணக்குகள், அறிக்கைகள், காலமுறை அறிக்கைகள் முதலியவற்றினை அறங்காவலர் ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும்.

(7) ஆணையாளரின் அனுமதிபெற்றுக்கொண்டு சட்டத்தின் 66-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சில காரியங்களுக்காக உபரிநிதியினைச் செலவிட அறங்காவலர் தகுதியுடையவர்.

(8) கோயிலில் பணி அல்லது அறக்கட்டளை நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்க அறங்காவலருக்கு அதிகாரமும் தகுதியும் உண்டு.

(9) கோயில் சிப்பந்திகளை நியமனம் செய்ய அறங்காவலர்களுக்கு அதிகாரம் உண்டு.

(10) கோயில் சிப்பந்திகளைத் தண்டிக்க அறங்காவலர்களுக்கு அதிகாரமுண்டு.

(11) ஊழியம், சடங்கு அல்லது விஷேசத்திற்குக் கட்டணங்களை நிர்ணயிக்கவும், இந்தக் கட்டணத்தில் எவ்வளவு பகுதிவரை அர்ச்சகருக்கு அல்லது இதர பதவி வகிப்பவர் அல்லது ஊழியருக்குக் கொடுக்கலாமென்பதனை நிர்ணயிக்கவும் அறங்காவலர் அதிகாரமுடையவர் ஆவார்.

(12) ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் திங்கள் இறுதிக்குள் கோயிலுக்கான வரவு-செலவுத் திட்டத்தினை அறங்காவலர் அனுப்புதல் வேண்டும்.

(13) சமய நிலையத்தில் செய்யப்பட வேண்டிய செலவுகளுக்குரிய அளவு முறையினைக் காட்டும் திட்டப் பதிவேட்டினைத் தயாரித்துப் பேணி வருதலை அறங்காவலர்கள் செய்தல் வேண்டும்.

(14) கோயிலுக்கு முறையான கணக்குகளை அறங்காவலர் வைத்து வருதல் வேண்டும். கணக்குகள் தணிக்கைக்குட்பட்டவையாகும். அதனால், அறங்காவலர்கள் கணக்குகளைத் தணிக்கைக்கு காட்டவேண்டும்.

1972 நவம்பர் 14]

(15) தணிக்கையில் சொல்லப்பெறும் குறைகளை அறங்காவலர் போக்க வேண்டும். தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பண இழப்பு, விரயம் முறையற்ற செலவினங்கள் முதலியவற்றிற்காக தண்ட நடவடிக்கைக்கு அறங்காவலர் உட்பட்டவராவார்.

16) பங்குத் தொகை, தணிக்கைக் கட்டணமும் ஆகியவற்றினை அறங் காவலர் ஆணையாளருக்குக் கொடுக்க வேண்டும்.

(17) அறங்காவலர்கள், தங்கள் பொறுப்பிலுள்ள கோயில்கள் சம்பந்தப் பட்ட வேலைகளை கூட்டத்தில் நடத்த வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றனர். இந்த விதிகள் அறங்காவலர்களின் கூட்டம் கூட்டுவது முதலியவற்றை முறைப் படுத்துகின்றன.

(18) அறங்காவலர் வருமானத்தினை முறையாக வசூலித்து வரவேண்டும். வருமானத்தை வசூலிப்பதற்கு அவர்தான் பொறுப்பானவராவர். ஒழுங்கான கணக்குகளை அவர் பேணி வருதல் வேண்டும்.

(19) நடப்பு விளைச்சல் ஆண்டு முடிவதற்கு முன் அடுத்த விளைச்சல் ஆண்டில் செய்ய உத்தேசித்திருக்கும் வேலைகளின் விவரங்களை அறங்காவலர் அனுப்புதல் வேண்டும்.

(20) நிலங்கள், உரிமைகள் முதலியவற்றைப் பொது ஏலத்தில் அறங்காவ லர் குத்தகைக்கு விடவேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS